**யடிநுவரபிரதேசசபை – 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

யடிநுவரபிரதேசசபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைபற்றிய கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசெயற்பாடு தொடர்பான கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்கபிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவுமற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுஅரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனதுபணிப்பின் கீழ் கணக்காய்வுசெய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனதுகருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்தஅறிக்கையில் தரப்படுகின்றன.

இந்தஅறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவிடயங்களின் தாக்கங்களைத்தவிர்த்து,நிதிக்கூற்றுக்கள் 2021திசெம்பர் 31 இல் யடிநுவரபிரதேசசபையின் நிதிநிலைமைமற்றும் அத்திகதியில் முடிவடைந்தஆண்டிற்கானஅதன் நிதிச்செயலாற்றல்பொதுவாகஏற்றுக்கொள்ளப்பட்டகணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்கஉண்மையானநியாயமானநிலைமையைவெளிப்படுத்துகின்றதுஎன்பதுஎனதுஅபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ளஅபிப்பிராயத்திற்கானஅடிப்படை

இந்தஅறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவிடயங்களைஅடிப்படையாகக் கொண்டுஎனதுஅபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கைகணக்காய்வுநியமங்களுக்கு (இ.க.நி) இணங்கஎன்னால் கணக்காய்வுமேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வுநியமங்களின் கீழானஎனதுபொறுப்பு, இந்தஅறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுசம்பந்தமானகணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்றபகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனதுமுனைப்பழியுள்ளஅபிப்பிராயத்திற்கானஅடிப்படையினைவழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டகணக்காய்வுசான்றுகள் போதியளவானவைமற்றும் பொருத்தமானவைஎன்பதுஎனதுநம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாகமுகாமைத்துவத்தினதும் தொடர்புபட்டநிருவகிக்கின்றதரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களைஉள்ளூராட்சிநிறுவனங்களுக்கானபொதுவாகஏற்றுக்கொள்ளப்பட்டகணக்கீட்டுதத் துவங்களுக்குஇணங்கதயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லதுதவறுகளின் காரணமாகஏற்படக்கூய பொருண்மையானபிறழ் கூற்றுக்களற்றநிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவகையில் தேவையானஉள்ளககட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பதுமுகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேசசபையின் நிதிஅறிக்கையிடல் நடைமுறைசம்பந்தமானபொறுப்பு,நிருவகிக்கின்றதரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்கதேசியகணக்காய்வுஅதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேசசபையின் வருடாந்தமற்றும் காலரீதியானநிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குமுடியுமானவகையில் சொந்தவருமானங்கள்,செலவுகள் சொத்துக்கள்,பொறுப்புக்கள் என்பனதொடர்பாகமுறையானஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுசம்பந்தமாககணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாகநிதிக்கூற்றுக்கள் மோசடிமற்றும் தவறுகளின் காரணமாகஏற்படுகின்றபொருண்மையானபிறழ் கூற்றுக்களிலிருந்துவிடுபட்டதாகநியாயமானஉறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வதுமற்றும் எனதுஅபிப்பிராயம் உள்ளடக்கப்பட்டகணக்காய்வாளர் தலைமைஅதிபதியின் அறிக்கைவழங்குவதுஎனதுநோக்கமாகும். நியாயமானஉறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலானஉறுதிப்படுத்தலொன்றாக இருந்தபோதிலும் இலங்கைகணக்காய்வுநியமங்களின் பிரகாரம் கணக்காய்வினைமேற்கொள்ளும் போதுஅதுஎப்போதும் பொருண்மையானதவறான கூற்றுக்கள் அற்றவைஎன்பதற்கானஉறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிஅல்லதுதவறுகள் தனியாகவோஅல்லது கூட்டாகவோதாக்கமளிப்பதால் பொருண்மையானதவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையானதன்மையானது இந்நிதிக்கூற்றுக்களைஅடிப்படையாகக் கொண்டுபயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்றபொருளாதாரதீர்மானம் தொடர்பானஏற்படுத்துகின்றதாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைகணக்காய்வுநியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாகஎன்னால் கணக்காய்வின் போதுதொழில்சார் வெளிப்படைத்தன்மைமற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கைஎடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்டகணக்காய்வுஅபிப்பிராயத்திற்கானஅடிப்படையினைவழங்கும் போதுமோசடிஅல்லதுதவறுகளின் காரணமாகநிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடியபொருண்மையானபிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடுசெய்வதற்குமாகசந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானகணக்காய்வுநடைமுறைகள் திட்டமிடப்பட்டுஅமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாகஏற்படுகின்றபொருண்மையானபிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்றதாக்கங்களைவிடமோசடிகளால் இடம்பெறுகின்றதாக்கங்கள் பாரியதாக இருப்பதானதுதவறான கூட்டிணைவால்,போலிஆவணங்களைத் தயாரிப்பதனால்,வேண்டுமென்றேவிட்டுவிடுவதனால்,பிழையாகக் காட்டுவதனால் அல்லதுஉள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகியகாரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீதுஅபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானகணக்காய்வுநடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள்மீதானஅறிவுபெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்றகணக்கீட்டுகொள்கைகளின் பொருத்தத் தன்மை,கணக்கீட்டுமதிப்பீடுகளின் நியாயத்தன்மை,முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்டநடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பனமதிப்பீடுசெய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புமற்றும் உள்ளடங்கங்களுக்காஅடிப்படையாகக் கொள்ளப்பட்டகொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளனஎனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டநிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தசமர்ப்பித்தல் மதிப்பீடுசெய்யப்பட்டது.

இயலுமானவகையிலும் தேவையானஎந்தவொருசந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றைபரீட்சிப்பதற்காககணக்காய்வுநோக்கொல்லைவிரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாகபார்க்கும் போதுபிரதேசசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாகமதிப்பீடுசெய்யப்படக்கூடியவகையில் அதன் ஒழுங்கமைப்பு,முறைமைகள்,நடைமுறைகள்,பதிவேடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதாஎனவும் அதன் முறைமைகள்

நடைமுறைகள்,பதிவேடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதாளனவும்,

- உரியஎழுத்துமூலசட்டத்திற்கோஅல்லதுபிரதேசசபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுஅல்லதுவிசேடஏற்பாடுகளுக்கு இணங்கபிரதேச சபைசெயற்படுகின்றதாளனவும்,

- தனதுஅதிகாரங்கள்,கடமைகள்,மற்றும் பணிகளுக்கு இணங்கநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாளனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும்,செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரியசட்டவிதிகளுக்கு இணங்ககொள்வனவுசெய்யப்பட்டுபயன்படுத்தப்பட்டுள்ளதாளனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பானஅறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்கதேசியகணக்காய்வுஅதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காககுறித்துரைக்கப்பட்டஏற்பாடுகளைஉள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேசசபையின்நிதிக்கூற்றுக்கள் முன்னையஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின்பிரகாரம் முன்னையஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்டபரிந்துரைகள்அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைதயாரிப்பதுசம்பந்தமானகணக்காய்வுஅவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வுஅவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காகநிலையானவைப்புக்காகபெறவேண்டியரூபா 72,242 ஆனவட்டிநிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டில் நிதிக்கூற்றுதயாரிக்கும் போதுசரிசெய்கிறேன். | வட்டிவருமானத்தைசரியாக இனங்கண்டுகணக்கீடுசெய்யவேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாதகட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லதுஅறிக்கைகள்

| கணக்காய்வுஅவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 03கணக்குவிடயத்திற்குரியநிதிக்கூற்றுக்களின் காட்டப்பட்டிருந்தகணக்குமீதகள் மற்றும் துணைபதிவேடுகளில்மீதிகளிற்கிடையில் ரூபா577,101ஆனவித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்யநடவடிக்கைஎடுக்கிறேன். | வித்தியாசத்தை இனங்கண்டுசீராக்கம் செய்யவேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குதேவையானஎழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வுஅவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தரூபா 5,965,085 ஆனகாணிமற்றும் கட்டிடங்களின் பெறுமதிஉருதிமற்றும் தளக்கோலபத்திரம்சமர்ப்பிக்கப்படாததனால் ,கணக்காய்வின் போதுதிருப்திகரமாகஒப்பாய்வுசெய்யமுடியவில்லை. | எதிர்காலத்தில் தேவையானநடவடிக்கைளடுக்கப்படுமென. | சொத்துக்களின் உடமையைஉறுதிப்படுத்தும் ஆவணங்கள் பேணப்படவேண்டும். |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டநிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2021திசெம்பர் 31 இல் முடிவடைந்தஆண்டிற்கானசபையின் மீண்டுவரும் செலவைமிகைத்தவருமானம் ரூபா65,403,743தொகையாக இருந்ததுடன்,அதற்குநேரொத்ததாகமுன்னையஆண்டின் மீண்டுவரும் செலவினத்தைமிகைத்தவருமானம் ரூபா32,561,340 ஆகும்.

### 2.2 வருமானநிருவாகம்

**வருமானங்களைசேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகைதொடர்பானஅவதானங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வுஅவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டியநிலுவைவீதவரிரூபா4,798,494 அறவிடப்பட்டிருக்காததுடன்,அம்மீதியினுள் ஒருஅலகின் நிலுவைரூபா 1,000 விஞ்சிய 383அலகுகளிலிருந்துஅறவிடவேண்டியரூபா 2,798,696 நிலவியது. | கொரோனாதொற்றுநிலைமகாரணத்தால் நிலுவைவருமானம் சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களைசெயற்படுத்தமுடியாமலிருந்ததென. | நிலுவைவீதவரிஅறவிடவேண்டும். |
| (ஆ) | நீர் கட்டணவருமானம் | | |
| | சபையின் மூலம் செயற்படுத்தப்படும் 06 நீர் கருத்திட்டங்களிலிருந்துமீளாய்வாண்டு இறுதியில் அறவிடவேண்டியரூபா 447,593 ஆனநீர் கட்டணம்அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில்நடமாடும் சேவைகள் நடாத்துவதற்கும்,பணம் செலுத்தாதவாடிக்கையாளர்களுக்கு தூண்டிப்புகட்டளைஅனுப்பவும் நடவடிக்கைளடுக்கப்படுமென. | நிலுவைநீர் கட்டணங்களைஅறவிடவேண்டும். |

## 3. செயற்பாட்டுமீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் பொதுசுகாதாரம்,பொதுப் பாவனைச் சேவைகள்,பொதுவீதிதொடர்பானவிடயங்களைமுறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல்,பொதுமக்களின் நல்வாழ்வு,வசதிகள்,நலன்புரிஎன்பனவாகசபையினால் நிறைவேற்றப்படவேண்டியிருந்தசெயற்பாடுகளைநிறைவேற்றுவதுதொடர்பாகஅவதானிக்கப்பட்டவிடயங்கள் கீழேதரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டுசெயற்திறனின்மைகள்

| கணக்காய்வுஅவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **நீண்டகாலமாகஅறவிடாதுநிலவும்கடன் மீதி** | | |
| 2014 ஆண்டுமற்றும் அதற்குமுன் இருந்துஅறவிடாதுநிலவியசபைக்குஅறவிடவேண்டியபெறுமதிரூபா 2,560,467 ஆன 21 கைத்தொழில் கடன்படுனர் மீதிமற்றும் கணக்காய்விற்குதகவல் சமர்ப்பிக்கப்படாதரூபா 482,540 ஆக காணப்பட்டபல்வேறுகடன்படுனர் மீதிஅறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போதுபழையபதிவேடுகளைபரிசோதித்துதகவல்களைகண்டறியநடவடிக்கைஎடுக்கப்படுதென. | கடன்படனர் மீதிகளை இனங்கண்டுஅறவிடவேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாதமற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வுஅவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபைக்குசொந்தமானபயன்படுத்தமுடியாதரூபா 719,000 ஆனகெப் வண்டியொன்று, 02 ட்ரெக்டர் மற்றும் 02 ட்ரெக்டர் டேலர் 2015 ஆண்டமுதல் பழுதுபார்ப்பதற்கோபராதீனம் செய்வதற்குநடவடிக்கைஎடுக்காதுவிளைவற்றுநிலவியன. | கெப் வண்டிபழுதுபார்க்கப்படுவதுஎனவும், 02 ட்ரெக்டர் மற்றும் 02 ட்ரெக்டர் டேலர் பண்டககணிப்பீட்டுதீர்மானம் பிரகாரம் ஏலவிற்பனைசெய்யநடவடிககைஎடுக்கப்படும் என. | பயன்படுத்தப்படாதசொத்துக்கள் தொடர்பாகபொருத்தமானநடவடிக்கைஎடுக்கவேண்டும். |